# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி
# ஐந்தாம் பத்து

## பத்தாம் திருமொழி - தீதறு
## திருநந்திபுரவிண்ணகரம்

** தீதறு நிலத்தொடு எரி காலினொடு *
நீர்கெழு விசும்பும் அவையாய் *
மாசறு மனத்தினொடு உறக்கமொடு இறக்கை *
அவை ஆய பெருமான் **
தாய் செற உளைந்து தயிர் உண்டு குடமாடு *
தடமார்வர் தகை சேர் *
நாதன் உறைகின்ற நகர் *
நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே! 1

உய்யும் வகை உண்டு சொன செய்யில் *
உலகேழும் ஒழியாமை முன நாள் *
மெய்யின் அளவே அமுது செய்ய வல *
ஐயன் அவன் மேவு நகர் தான் **
மைய வரிவண்டு மது உண்டு கிளையோடு *
மலர் கிண்டி அதன் மேல் *
நைவளம் நவிற்று பொழில் *
நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே! 2

உம்பர் உலகேழு கடல் ஏழு மலை ஏழும் *
ஒழியாமை முன நாள் *
தம் பொன் வயிறு ஆரளவும் உண்டு அவை உமிழ்ந்த *
தடமார்வர் தகை சேர் **
வம்பு மலர்கின்ற பொழில் பைம்பொன் வரு தும்பி மணி *
கங்குல் வயல் சூழ் *
நம்பன் உறைகின்ற நகர் *
நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே! 3

பிறையின் ஒளி எயிறிலக முறுகி எதிர்
பொருதும் என * வந்த அசுரர் *
இறைகள் அவை நெறு நெறன வெறிய அவர்
வயிறழல * நின்ற பெருமான் **
சிறை கொள் மயில் குயில் பயில மலர்கள்
உக அளி முரல * அடிகொள் நெடு மா *
நறை செய் பொழில் மழை தவழும் *
நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே! 4

மூள எரி சிந்தி முனிவெய்தி அமர் செய்தும்
என * வந்த அசுரர் *
தோளும் அவர் தாளும் முடியோடு பொடியாக *
நொடியாம் அளவு எய்தான் **
வாளும் வரி வில்லும் வளை ஆழி கதை
சங்கம் இவை * அங்கை உடையான் *
நாளும் உறைகின்ற நகர் *
நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே! 5

தம்பியொடு தாம் ஒருவர் தன் துணைவி
காதல் * துணையாக முன நாள் *
வெம்பி எரி கானகம் உலாவும் அவர் தாம் *
இனிது மேவு நகர் தான் **
கொம்பு குதி கொண்டு குயில் கூவ மயில்
ஆலும் * எழிலார் புறவு சேர் *
நம்பி உறைகின்ற நகர் *
நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே! 6

தந்தை மனம் உந்து துயர் நந்த இருள்
வந்த விறல் * நந்தன் மதலை *
எந்தை இவன் என்று அமரர் கந்த மலர் கொண்டு
தொழ * நின்ற நகர் தான் **
மந்த முழவோசை மழையாக எழு கார் *
மயில்கள் ஆடு பொழில் சூழ் *
நந்தி பணி செய்த நகர் *
நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே! 7

எண்ணில் நினைவு எய்தி இனி இல்லை இறை
என்று * முனியாளர் திரு ஆர் *
பண்ணில் மலி கீதமொடு பாடி அவர்
ஆடலொடு * கூட எழில் ஆர் **
மண்ணில் இது போல நகர் இல்லை என *
வானவர்கள் தாம் மலர்கள் தூய் *
நண்ணி உறைகின்ற நகர் *
நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே! 8

வங்க மலி பௌவம் அது மா முகடின்
உச்சி புக * மிக்க பெருநீர் *
அங்கம் அழியார் அவனது ஆணை தலை
சூடும் * அடியார் அறிதியேல் **
பொங்கு புனல் உந்து மணி கங்குல் இருள்
சீறும் ஒளி * எங்கும் உளதால் *
நங்கள் பெருமான் உறையும் *
நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே! 9

** நறை செய் பொழில் மழை தவழும் *
நந்திபுர விண்ணகரம் நண்ணி உறையும் *
உறை கொள் புகர் ஆழி சுரி சங்கம் *
அவை அங்கை உடையானை ** ஒளி சேர்
கறை வளரும் வேல் வல்ல * கலியன் ஒலி
மாலை இவை ஐந்தும் ஐந்தும் *
முறையில் இவை பயில வல அடியவர்கள்
கொடுவினைகள் * முழுதகலுமே 10

**அடிவரவு:** தீதறு உய்யும் உம்பர் பிறை மூள தம்பியொடு தந்தை எண்ணில் வங்கம் நறைசெய் வண்டு

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**